FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319429

1. District : Coimbatore PS: Vigilance and Anti Corruption Year: 2026 FIR No.: 11/2026/ACICB Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 16.07.2026

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 12.30hrs
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 07.07.2026 Date to : 14.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 22.30hrs Time to : 21.38hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 15.07.2026 Time : 17.30hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Volume -II Time : 17.30hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 5km Southeast
Beat Number : (b) Address : Coimbatore District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. A. Rujaina Fathima (b) Father's/ Husband's Name : Mr. Mahmajan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 32yrs (d) Nationality : Indian (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : - Place of Issue : -
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : Door No. 21E, Nadutheru, Melakkarai
தொழில் முகவரி Thatcha Nallur (post) Tirunelveli.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
SSI. Boopathy Special Team SSI, CI Kattoor police Station Coimbatore City.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) –

Submitted :-

Separate sheet enclosed here with

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Rujana Fathima 16/7/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

16/07/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. SHEELA

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

Inspector of police
Vigilance and Anti-Corruption
Coimbatore.

15. Date & Time of despatch to the court: 16.07.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 5pm hrs

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2026/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.C87 8319429-ன் தொடர்ச்சி.

நேற்று 15.07.2026-ம் தேதி புதன்கிழமை மாலை 17.30 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருநெல்வேலி மாவட்டம், தச்சநல்லூர்(போஸ்ட்), மேலக்கரை, நடுத்தெருவில், கதவு எண்.21E என்ற முகவரியில் குடியிருந்து வரும் திருமதி.A.ருஜைனா பாத்திமா என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியின் மூலம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அப்புகாரினை படித்து பார்த்து, அப்புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் C-1 காட்டூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்துவரும் SSI திரு.பூபதி என்பவர் வாதியின் தார் காரை கொடுத்ததற்காகவும், அவரது கணவரின் செல்போன் மற்றும் அவர்களது கடையின் செல்போன் ஆகிய இரண்டு செல்போன்களை கொடுப்பதற்கும், மேலும் கணவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட CSR-ஐ முடித்து கொடுப்பதற்காகவும் ரூ.70,000/-ஐ லஞ்சமாக கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து மேற்கொள்ளப்பட்ட எனது இரகசிய விசாரணையில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்பதும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட எனது இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 16.07.2026-ம் தேதி மதியம் 12.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2026/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி SSI திரு.பூபதி என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் A.ருஜைனா பாத்திமா, வயது 32, க/பெ.மகாராஜன், கதவு எண்.21E, நடுத்தெரு, மேலக்கரை, தச்சநல்லூர் (போஸ்ட்) திருநெல்வேலி-627358. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கோயம்புத்தூர். அய்யா/அம்மா, நான் திருநெல்வேலி மாவட்டம், தச்சநல்லூர்(போஸ்ட்), மேலக்கரை, நடுத்தெருவில், கதவு எண்.21E என்ற

முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நானும் எனது கணவர் மகாராஜா என்பவரும் பொள்ளாச்சியில் பானு என்டர்பிரைசஸ் என்ற பெயரில் செல்போன் உதிரிபாகங்களை விற்பனை செய்யும் கடையை கடந்த ஒரு வருடமாக நடத்தி வருகிறோம். எனது உடன்பிறந்த அண்ணன் சலாவுதீன் திருநெல்வேலியில் பிசினஸ் செய்து வருகிறார். புதிதாக மகேந்திரா தார் (MAHINDRA THAR ROXX) பதிவு எண். TN 72 CL 4083 கொண்ட காரினை சுமார் ரூ.30/- லட்சம் ரூபாய்க்கு வாங்கி கடந்த 08.05.2026ஆம் தேதி அன்று எனது அண்ணன் சலாவுதீன் அவரது பெயரில் பதிவு செய்தார். அவரது காரை நாங்கள் ஓட்ட ஆசைப்பட்டதால், அந்த தார் காரை ஓட்டுவதற்காக என் கணவரிடம் கொடுத்தார். நாங்களும் அதை சில நாட்கள் ஓட்டினோம். இந்த சமயத்தில் நாங்கள் மேற்படி திருநெல்வேலி முகவரியில் 1¼ சென்டில் வீடு கட்டி வந்ததால், மேலும் எங்களுக்கு பணம் தேவைப்பட்டதால் என் கணவரின் நண்பர் அஜீத்திடம் மேற்படி காரை Finance-ல் அடமானம் வைத்து பணம் ரூ.6,20,000/- வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அவரும் அவருக்குத் தெரிந்த தென்காசி ஊரைச் சேர்ந்த ரவிக்குமார் என்பவரிடம் எங்களுடைய தார் காரை கொடுத்து, அவரும் ரூ.6,20,000/-ஐ எனது கனரா வங்கிக் கணக்கு எண்.230100050306560-க்கு 21.05.2026 ஆம் தேதி அன்று அனுப்பி வைத்தார். அப்போது நாங்கள் அஜீத்திடம் காரை ஓட்டாமல் வைத்திருக்க வேண்டும் என்றும், காரை பயன்படுத்தினால் மாதம் ரூ.40,000/- கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம். அதன்படி சுமார் ஒரு மாதம் கழித்து அஜீத் என்பவர் எங்களை தொடர்பு கொண்டு மேற்படி காரினை பயன்படுத்தியதற்கு ரவிக்குமார் ரூ.40,000/-த்தை Google Pay மூலமாக எனது அண்ணன் சலாவுதீனுக்கு அனுப்பி விட்டதாக தெரிவித்தார். அப்போதுதான் ரவிக்குமார் என்பவர் எங்களது காரை பயன்படுத்தி வருகிறார் என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம். அதனால் அஜீத் என்பவரிடம் எங்களது காரை எப்படி ரவிக்குமார் ஓட்டலாம் என்று கேட்டோம், அதற்கு அவர் உங்க கார் மும்பையில் உள்ளது என்றும், தவறான விஷயங்களுக்கு எங்களது தார் காரை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். எனவே நாங்கள் காரை திரும்பத் தருமாறு கேட்டோம். அதற்கு முன்பணமாக ரூ.3,00,000/-ஐ அஜீத்திடம் கொடுத்து காரை எங்களிடம் கொண்டு வந்து கொடுக்க கேட்டுக் கொண்டோம். மீதி பணத்தை கார் எங்களிடம் வந்தவுடன் தருகிறோம் என்று சொன்னோம். ஆனால் காரை 10-நாட்களாகியும் கொண்டு வரவில்லை. இது சம்பந்தமாக அஜீத்திடம் கேட்கலாம் என்று அவரை தொடர்பு கொண்ட போது அவர் எங்களது அழைப்பை பிளாக் செய்துள்ளதாக தெரிந்து கொண்டோம். அதன் பின்னர் எங்கள் கார் இருக்கும் இடத்தை எங்களது செல்போன் மூலம் பார்த்தபோது எங்களது காரை ஆரம்ப காலத்தில் மும்பையில் ஓடியது என்றும், தற்சமயம் கோவையில் உள்ளது என்றும் தெரிந்து கொண்டோம். மேற்படி காரை தவறாக பயன்படுத்தி வந்ததாக தெரிவித்திருந்ததால் நாங்கள்

எங்களிடம் இருந்த ஸ்பேர் சாவியை வைத்து கோயம்புத்தூர் காந்திபுரம் பஸ்ஸ்டேன்ட் அருகில் Grand Palace என்ற ஹோட்டலில் நிறுத்தி வைத்திருந்த காரினை 03.07.2026ஆம் தேதி அன்று எனது கணவர் அங்கிருந்து எடுத்துக் கொண்டு வந்து பொள்ளாச்சியில் உள்ள வீனஸ் டுவீலர் ஸ்டேண்டில் பார்க்கிங்கில் அன்றே நிறுத்திவைத்தார். பின்னர் எனது கணவரின் பிறந்தநாள் 07.07.2026-ஆம் தேதி அன்று வருவதால், நாங்கள் எங்கள் மொபைல் ஸ்டோருக்கு சாமான்கள் வாங்குவதற்காக வேண்டி டெல்லி செல்லலாம் என்றும் அதை ஒரு சுற்றுலாவாக மாற்றிக் கொள்ளலாம் என்று நினைத்து, டெல்லிக்கு எங்களது பலினோ TN72 CH 6838 என்ற எண்கொண்ட வாகனத்தை ஓட்டுவதற்காக எனது கணவரின் நண்பர் அருண் என்பவரை அழைத்துக் கொண்டு 03.07.2026 அன்று சென்றோம். நாங்கள் ஹைதராபாத் 05.07.2026 அன்று சென்றடைந்து அங்குள்ள ஒரு பெட்ரோல் பங்கில் CNG நிரப்பி கொண்டு இருக்கும் பொழுது, நாங்கள் காரின் வெளியே நின்று கொண்டிருந்தோம். அப்போது திடீர் என்று எங்களை நோக்கி 6 பேர்வந்தார்கள், அதில் இரண்டு பேர் Special Team போலீஸ் என்று தங்களை அறிமுகப்படுத்தி கொண்டு, எங்கள் காரை ஓட்டிவந்த அருணிடம் இருந்த ரூ.20,000/-ம் மற்றும் அவரிடமிருந்த ஒரு போனை வாங்கிகொண்டு அங்கேயே அவரை இறக்கிவிட்டார்கள். பின்னர் எங்களிடம் பணத்தை வாங்கி ஏமாற்றி விட்டதாக உங்கள் மீது வழக்கு உள்ளது என்று சொல்லி, எனது கணவரின் Realme செல்போன் எண்.9445981122 மற்றும் எனது கடையின் Redmi 14C செல்போன் ஆகிய இரண்டு செல்போன்களை வாங்கிவைத்து கொண்டார்கள். பின்னர் பலினோ காரில் ரவிக்குமாரின் உடன்பிறந்த அண்ணன் விக்னேஷ், நண்பர் கணேஷ் ஆகியோர்களுட என்னையும் எனது கணவரையும் இன்னோவா காரில் ஏறச்சொல்லி SSI பூபதி அவர்கள் வற்புறுத்தினார். நாங்களும் அந்த காரில் ஏறினோம் அதே காரில் அஜீத்தும் SSI, பூபதி மற்றும் காவலர் முரளி அவர்களும் இருந்தார்கள் அந்த இன்னோவா காரினை அதன் ஓட்டுனர் அனில் ஓட்டிவந்தார். அப்போது SSI பூபதி அவர்கள் என்னிடமும் எனது கணவர் மற்றும் அஜீத் ஆகிய எங்களிடம் கோவைக்கு சென்றடைவதற்குள் ரவிக்குமாருக்கு கொடுக்கவேண்டிய ரூ.6,60,000/-ஐ கொடுத்துவிட்டால் நாங்கள் இங்கேயே இறக்கிவிட்டு சென்று விடுவோம், உங்கள் மீது வழக்கு வராது என்று சொன்னார். SSI பூபதி அவர்கள் எங்கள் மூன்றுபேருடைய செல்போன்களை கொடுத்துவிட்டு பணத்தை ரெடி செய்து அனுப்ப சொன்னார். அப்போது எங்களுடன் இருந்த அஜீத்திடம் நான் கொடுத்த பணம் ரூ.3,00,000/-ஐ வேண்டும் என்று கேட்டோம். அவர் முதலில் மறுத்தார் பின்னர் ஒத்துக் கொண்டு ரூ.2,90,000/-ஐ ரவிக்குமாருக்கு அனுப்பிவிட்டு அனுப்பியதற்கான ஆர்.டி.ஜி.எஸ்-ன் விபரங்களை எனக்கு அனுப்பிவைத்தார். பின்னர் நானும் எனக்கு தெரிந்த நபரிடம் எனது வங்கிக்

கணக்கிற்கு பணத்தை அனுப்ப சொல்லி ரூ.3,70,000/-ஐ ரவிக்குமாரது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தேன். கடந்த 06.07.2026ஆம் தேதி பொள்ளாச்சிக்கு வந்து சேர்ந்தோம் அப்போது SSI பூபதி அவர்கள் ஸ்டேசன் செலவுக்கு என்று ரூ.1,25,000/-ம் வேண்டும் என்றும் அதில் ரூ.50,000/- அஜீத் கொடுக்க வேண்டும் என்றும், ரூ.75,000/-ஐ எங்களிடம் தனக்கு கொடுக்க சொல்லிக் கேட்டார். நாங்களும் வேறு வழியில்லாமல் பணம் ரூ.30,000/-ஐ பொள்ளாச்சி பஸ்ஸ்டேன்ட் அருகில் உள்ள KVB ATM-ல் இருந்து எடுத்தும், பணம் ரூ.45,000/-ஐ எனது அண்ணனிடமிருந்து பெற்று மொத்தம் ரூ.75,000/-ஐ, நான் SSI பூபதி அவர்களிடம் கொடுத்தேன். அவரும் அதை அவரது பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். அதேபோல் அஜீத் அவர்களும் ரூ.50,000/-ஐ ரொக்கமாக SSI பூபதி அவர்களிடம் கொடுத்தார், அதனையும் அவர் வாங்கி வைத்துக் கொண்டார், பின்னர் நாங்கள் அனைவரும் பொள்ளாச்சியில் தார் காரை நிறுத்தப்பட்டிருந்த பார்க்கிங் இடத்திற்கு வந்து சேர்ந்தோம். மேற்படி SSI பூபதி அவர்கள் சில பார்மாலிட்டி உள்ளது என்று சொல்லி, என்னிடம் 07.07.2026-ஆம் தேதி அன்று C-1 காட்டூர் போலீஸ் ஸ்டேசனுக்கு வரசொல்லிவிட்டு எங்களது தார் வாகனத்தை அவர் எடுத்து சென்றார். பின்னர் நான் அதன்படி 07.07.2026-ஆம் தேதி அன்று காலை 10.30 மணிக்கு C-1 காட்டூர் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றேன். அங்கிருந்த SSI பூபதி அவர்கள் எங்களிடம் மேலும் ரூ.50,000/-ம் கொடுத்தால்தான் காரை தருவேன் என்று சொன்னார். நாங்கள் ஏற்கனவே நீங்கள் கேட்டபடி ரூ.75,000/-பணத்தை கொடுத்து விட்டோமே என்று கேட்டதற்கு, ரூ.50,000/- கொடுத்தால் தான் காரை திரும்ப கொடுப்பேன் என்று கட்டாயமாக சொல்லிவிட்டார். இது சம்பந்தமாக நான் 08.07.2026ஆம் தேதி அன்று இரவு 10.30 மணிக்கு மீண்டும் ஸ்டேஷன் சென்று காரை கேட்டபோது அவர் அதையே மீண்டும் சொன்னார். எனது அண்ணனுக்கு காரை ஒப்படைக்க வேண்டும் என்பதால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டு திரு.ரவிக்குமார் அவரது செல்போன் எண்.7708462012 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு, அவரிடம் நான் ஸ்டேசனுக்கு சென்று காரை கேட்டால் SSI பூபதி அவர்கள் ரூ.50,000/-ம் பணம் கொடுத்தால் தான் காரை தருவதாக சொன்னார் என்றும், அதனால் நான் கண்டிப்பாக தீக்குளிக்க போகிறேன் என்று அவரிடம் முறையிட்டேன். பின்னர் அரைமணி நேரம் கழித்து திரு.ரவிக்குமார் அவர்கள் என்னை செல்போனில் அழைத்து கோவை திருவள்ளுவர் பஸ் நிலையத்தின் அருகில் இருக்கும் போலீஸ் நிலையத்திற்கு செல்லுமாறும், அங்கு SSI பூபதி அவர்கள் அங்கு இருப்பார் என்றும் அவர் உங்களது காரை தருவார் என்று சொன்னதின்பேரில், நானும் எனது கணவரும் அங்கு செல்ல அங்கிருந்த SSI பூபதி அவர்கள் எங்களிடம் தார் வாகனத்தை நல்லமுறையில் பெற்றுக்கொண்டதாக எழுதி கையெழுத்து போடசொன்னார். நானும் கையெழுத்து போட்டு கொடுத்தேன். பின்னர் அவரிடம் காரை கேட்டேன். அவர் எங்களை அருகிலிருந்த காவலர் குடியிருப்பிற்கு

அழைத்து சென்று அங்கு நிறுத்திவைத்திருந்த எங்கள் காரை கொடுத்தார். மீண்டும் அவர் என்னிடம் ஏற்கனவே கேட்ட ரூ.50,000/- தர வேண்டும் என்று சொல்லி எனது வாகனத்தின் டிரைவர் இருக்கையின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டார். நான் அவரிடம் பின்னர் பணத்தை தருகிறேன் கண்டிப்பாக google pay மூலமாவது அனுப்பி வைக்கிறேன் என்றும், எங்களது இரண்டு செல்போன்கள் உங்களிடம் தானே உள்ளது, நான் ரூ.50,000/-ம் தந்து மேற்படி இரண்டு செல்போன்களையும் பெற்றுக் கொள்கிறேன் என்று சொன்னேன். பின்னர் 14.07.2026ஆம் அன்று SSI பூபதி அவர்களது செல்போன் எண்.9498172869 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் எண்.9361275034 என்ற எண்ணிற்கு இரவு 09.38 மணிக்கு என்னை அழைத்து தார் வாகனத்தை எங்களிடம் கொடுத்ததற்காக ரூ.30,000/-ல் இருந்து ரூ.20,000/-குறைத்து கொள்வதாகவும், இரண்டு செல்போன்களை திரும்ப கொடுப்பதற்கும், எனது கணவர் பெயரில் பதிவு செய்யப்பட்ட CSR-ஐ முடித்து வைப்பதற்காகவும் ரூ.50,000/-ம் லஞ்சமாக தரவேண்டும் என்றும், பணம் கொண்டு வரும்போது உடன் வக்கீலோ வேறு நபர்களையோ அழைத்து வரவேண்டாம், தனியாகதான் நீங்கள் வரவேண்டும் என்று அறிவுறுத்தினார். ஆக மொத்தம் ரூ.70,000/- லஞ்சமாக கேட்கும் மேற்சொன்ன C-1 காட்டுர் காவல் நிலையத்தில் பணிபுரியும் Special Team SSI திரு.பூபதி என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd.XXXXX (A.Rujaina Fatima). நாள்:15.07.2026,இடம்: கோவை. Respected Madam, Received the complaint on 15.07.2026 at about 17.30 hrs. sd.XXXXX, (D.SHEELA) 15.07.2026, Inspector of Police, V&AC, CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.11/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 16.07.2026 at about 12.30 hrs. sd.XXXXX, (D.SHEELA) 16.07.2026, Inspector of Police, V&AC, CBE. இம் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

16/07/26

(D.ஷீலா),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.